**தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 - 2019**

-----------------------------------------------------------------------------------------------------------

தெற்கு அதிவேக பாதை விரிவாக்கல் செயற்திட்டம் - பகுதி 2 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள் நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஏற்கனவே செயற்படும் மாத்தறை தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான தெற்கு அதிவேகப்பாதையினை (கொழும்பு தொடக்கம் மாத்தறை) விஸ்தரிப்பதனூடாக முன்மொழியப்பட்ட அம்பாந்தோட்டை சர்வதேச மைய அபிவிருத்தி செயற்திட்டம், அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகம் மற்றும் சர்வதேச விமான நிலையம் (மத்தளை) போன்றவற்றை இனைத்தல் செயற்திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான பெலியட்ட தொடக்கம் வெட்டியா இலிருந்தான தெற்கு அதிவேகப்பாதையின் 26 கிலோமீற்றர் இனை நீடிப்பதற்காக மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 60,601.60 மில்லியனாக உள்ளதுடன், அதில் 85 சதவிகிதமான ரூபா 46,920 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 360.29 மில்லியனை சிவில் மற்றும் ஆலோசனை சேவைக்காக நிதியளிப்புச் செய்வதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி இணங்கியிருந்தது. மிகுதி 15 சதவிகிதம் ஐ.அ.டொலர் 63.58 மில்லியன் இலங்கை ஹட்டன் தேசிய வங்கியினால் நிதியளிக்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் பகுதி 02 இன் கீழான நடவடிக்கைகள் 2016 ஒக்டோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 ஒக்டோபர் 27 இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பிற்காக செலுத்தப்பட வேண்டிய தாமத வட்டிக்கான ஏற்பாடு இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் குறைமதிப்பீடு. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு மீது செலுத்தப்பட வேண்டிய தாமத வட்டிக்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் இல.08 இன் பிரகாரம் ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| இல | கணக்காய்வு அவதானிப்பு | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சாத்தியவள கற்கை அறிக்கையில் ஓர் இடமாறலை நிறுவ ஓர் இடமாக அடையாளப்படுத்தப்பட்டிறாத பொதுமக்களிற்கு அதிவேகப்பாதையை திறக்கும் நேரத்தில் பதிகமவில் ஓர் தற்காலிக இடமாறலினை நிறுவ கூட்டுமொத்தம் ரூபா 100.83 மில்லியன் ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | எக்ஸிம் வங்கியின் ஒப்புதலுடன் ஒப்பந்த சேமிப்பினை பயன்படுத்தி பதிகமவில் ஓர் இடமாறலினை நிர்மானிக்க அமைச்சரவை அமைச்சர்கள் அனுமதி வழங்கியிருந்தனர். | அனைத்து தேவைப்பாடுகளும் எதிர்கால செயற்திட்ட திட்டமிடலில் கருத்தில் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | பக்க வடிகான்கள், தொலைதூர தகடுகள் மற்றும் திசைகாட்டி பதாகைகள், புல்வெட்டல் மற்றும் அசுத்த நீர் பாதுகாப்பு மற்றும் ஒளியூட்டல் போன்ற நான்கு பிரதான பீஓகியுவ் உருப்படிகள் பொதுமக்களிற்காக அதிவேகப்பாதையை திறக்கும் நேரத்தில் அண்ணளவாக 95 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | மிகுதி வேலைகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக மேலதிக கிரயங்கள் ஏற்படும் சாத்தியம். | அதிவேகப்பாதையின் திறக்கும் நேரத்தில் பக்க வடிகான்கள், புல்வெட்டல், அசுத்தநீர் பாதுகாப்பு, தொலை தூர தகடுகள் மற்றும் திசைகாட்டி பதாகைகள் மற்றும் ஒளியூட்டல்களில் பூர்த்தியாக்கல் கோவிட் 19 தொற்று நிலமை, ஊரடங்கு உத்தரவு மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு காரணமாக தாமதமடைந்திருந்தது. | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | ஒப்பந்த விசேட நிபந்தனைகளின் பிரகாரம் செயற்திட்ட பொறியியலாளர்களின் திருப்திக்கான 2737 சிக்கல்கள் மற்றும் 1887 மிகுதியான கட்டுமான வேலை உருப்படிகள் போன்றவற்றின் பூர்த்தியாக்கலிற்கு முன்னர் கையேற்பு பத்திரத்தினை வழங்கியிருந்தமை கணக்காய்வில் கேள்விக்குறியாக காணப்பட்டது. | மிகுதி வேலைகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக மேலதிக கிரயங்கள் ஏற்படும் சாத்தியம். | தொற்று காலப்பகுதிக்கு சற்று முன்னர் 2020 பெப்ரவரியில் பிரதான உருப்படிகளின் நீண்ட பட்டியலுடன் டிஓசீயினை வழங்குவதற்கான பொறியியலாளர்களின் நடவடிக்கை கோவிட் 19 பரவலிலிருந்து ஒப்பந்த விளைவுகளை தவிர்க்க தூண்டியது. | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட முகாமையானது 2020 செப்தம்பர் முடிவளவில் கையேற்பு பத்திரத்தினை வழங்கும் நேரத்தில் அடயாளப்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகுதி வேலை உருப்படிகள் போன்றவற்றை பூர்த்தி செய்ய திட்டமிட்டிருந்தும், அவ் உருப்படிகளில் அனேகமானவை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. உரிய நேரத்தில் குறைபாடுகள் மற்றும் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய கனிசமான அளவு கவனம் ஒப்பந்ததாரரிடமிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதி வேலைகளை பூர்த்தியாக்கலில் தாமதம் காரணமாக மேலதிக கிரயங்கள் ஏற்படும் சாத்தியம். | கோவிட் 19 பரவல் விளைவு காணப்பட்ட போதிலும் ஒப்பந்ததாரர் குறை நிபர்த்தி அறிவுறுத்தல் காலப்பகுதியின் போது குறைபாடுகள் மற்றும் மிகுதி வேலைகளை பூர்த்தி செய்ய நாடியிருந்தார். | மிகுதி வேலைகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | சேவைப்பகுதிகளின் இரண்டு இடங்கள் சாத்தியவள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும், அது மதிப்பீடு செய்யப்பட்டிராததுடன் பீஓகியுவ் ஏற்பாடுகள் சேவை பகுதிகளினை நிர்மானிக்க செய்யப்பட்டிருக்கவுமில்லை. மேலும், தெற்கு அதிவேகப்பாதையின் 46 கி.மீ இற்கு பின்னர் நெடுஞ்சாலை பாவனையாளர்களிற்காக | வெலிபன்ன தொடக்கம் ஹம்பந்தோட்டை வரையான 176 கி.மீ பயணம் செய்யும் பயணிகளிற்கு சேவை வழங்குதல் ஓர் சிக்கலான நிலமையில் இருந்தது. | எவ்வித ஈஎஸ்ஈபி ஒப்பந்த பீஓகியுவ்வும் கருத்துரு நிலையிலும் சிவில் வேலை ஒப்பந்தங்களினூடாக சேவை பிரிவினை நிர்மானிக்க ஏற்பாடு செய்திருக்கவில்லை. | தேவையான ஏற்பாடுகள் தெற்கு அதிவேகப்பாதை விஸ்தரிப்பு செயற்திட்டத்திற்கான சேவை பகுதிகளின் நிர்மானத்திற்காக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வித சேவை பிரிவிகளும் காணப்படவில்லை. | | | |
| (ஆ) | கூட்டு மொத்தம் ரூபா 347 மில்லியன், பீஓகியுவ் தொகை ரூபா 225 மில்லியனை மிஞ்சி 2019 திசெம்பர் வரையான செயலாற்றல் பாதுகப்பு பத்திரத்தின் கிரயத்தினை மீளப்பெற ஒப்பந்ததாரரிற்கு மேலதிகமாக செயலாற்றல் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகள். | பிஎஸ் இனை வழங்குவதற்கான உண்மையான கிரயம் ஒப்பந்த பூர்த்தியாக்கலிற்கான அதனடுத்த கால நீடிப்பு காரணமாக அதிகரித்திருந்தது. | அளவைப்பட்டியல்களின் மீளாய்வு பெறுகை நிபுனர்கள் மற்றும் தொழிநுட்ப மதிப்பீட்டு குழுவினால் பெறுகை ஆவணங்களை வழங்க முன்னர் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஒப்பந்ததாரர் மீள் ஏற்றுமதி அல்லது வரிகள் கொடுப்பனவினை தவிர்ப்பதனூடாக ஒப்பந்த முடிவில் ஐ.அ.டொலர் 10,363,385 தொகையான ஏற்றுமதி செய்யக்கூடிய உருப்படிகளை வைத்துக்கொள்வதன் மூலம் அசாதாரண நன்மைகளை பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்ததாரர்களிற்கு தேவையற்ற நன்மைகள். | ஒப்பந்ததாரர் பகுதி 2 இனை பூர்த்தி செய்யும் வரை ஈஎஸ்ஈபி – பிரிவு 03 இற்காக இறக்குமதி செய்யப்பட்ட உபகரணம் மற்றும் பொதிகளினை பயன்படுத்துவதனூடாக ஈஎஸ்ஈபி – பிரிவு 02 இன் நட்ட செயன்முறையை கையேற்க முடிந்திருந்தது. | செயற்திட்ட முடிவில் மீள் ஏற்றுமதி செய்ய அல்லது வரிகளை செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |